22 FEB 1997


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 11 சனிக்கிழமை (22-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 87


## மன்னார் கடற்பரப்பில் சோகச் சம்பவம்:

# அகதிகள் சென்ற படகு கவிழ்ந்து 130க்கும் மேற்பட்டோர் மரணம்!

## 85 சடலங்கள் நேற்று வரை மீட்பு வன்னியில் இன்று துக்கதினம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 22

மன்னாரிலிருந்து தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அகதிகள் படகு ஒன்று கவிழ்ந்ததில் 130 க்கும் மேற்பட்ட தமிழர்கள் மரணமானார்கள்.

மன்னாருக்கு வடக்கே, நாச்சிக்குடாவுக்கும் விடத்தல்தீவுக்கும் இடையேயான கடற்பரப்பில் புதன்கிழமை இரவு இந்தச் சோக சம்பவம் இடம்பெற்றது.

இறந்தவர்களில் பெண்களும், குழந்தைகளுமே அதிக எண்ணிக்கையினர் என்றும், நேற்றுவரை 85 பேரின் சடலங்களை விடுதலைப் புலிகள் தேடிக் கண்டெடுத்தனர் என்றும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

படகு விபத்தில் மரணமானவர்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாக வன்னியில் இன்று துக்கதினம் அனுஷ்டிக்கப்படும். உலகில் உள்ள அனைத்துத் தமிழ் மக்களையும் விபத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்குமாறும் விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

''எடிபல'' இராணுவ நட

(8ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப பேச்சுவார்த்தையே இல்லை எண்டு சொல்லுங்கோவன் ......!

### எடிபல தொடர்கிறது

வவுனியாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட 'எடிபல' இராணுவ நடவடிக்கை நேற்றுத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### விமான சேவை நேற்று ரத்து

யாழ்ப்பாணம், பெப். 22

கொழும்பு—பலாலி தனியார் பயணிகள் விமான சேவை நேற்று ரத்துச் செய்யப்பட்டது.

இதனால் விமானத்தில் பயணம் செய்ய வந்த பயணிகள் திரும்பிச் சென்றனர்.

### ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரை

கொழும்பு, பெப். 22

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று இரவு 9.15 மணிக்கு நாட்டுமக்களுக்கு தொலைக்காட்சியில் முக்கிய உரை நிகழ்த்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-150-3)

### கப்பலில் 790 பேருக்கு இடம்

யாழ்ப்பாணம், பெப். 22

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு 790 பயணிகளுடன் இன்று கப்பல் புறப்படவிருப்பதாக சிவில் நிர்வாக அலுவலகம்தெரிவித்தது.

சிவில் நிர்வாக அலுவலகத்தில் பயணம் செய்ய பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 188முதல் 202வரை 409 முதல் 524 வரை மற்றும் 533, 535, 538 உள்ளவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

### தாக்குதலில் பொலீஸார் ஒருவர் பலி

கொழும்பு, பெப். 22

வவுனியா, கெப்பிட்டிக்கொலாவ வீதியில் உள்ள குடாக்கச்சிகுடிய பொலீஸ் காவல் நிலையத்தின் முன்னணி அரண்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

கடந்த புதன்கிழமை நடந்த இந்தத் தாக்குதலில் ஒரு பொலீஸார் காயமடைந்து பின்னர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# பலாலி நோக்கிப் புறப்பட்ட "அன்ரனோவ்" விழுந்து சேதம்

## 4 படையினர் பலி! 36 பேர் காயம்!!

கொழும்பு, பெப்ரவரி 22

59 படையினருடன் இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து பலாலி நோக்கிப் புறப்பட்ட ரஷ்ய தயாரிப்பு 'அன்ரனோவ் - 32' ரக விமானம் ஒன்று ஓடுபாதையில் இருந்து மேற்கிளம்பிய சிறிது நேரத்தில் கீழே வீழ்ந்து கடும் சேதத்துக்குள்ளாகியது.

இந்தச் சம்பவத்தில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர். 36 படையினர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மோசமாகக் காயமடைந்தவர்களுக்கு அவசர சத்திரசிச்சை அளிக்கப்பட்டதாக கொழும்பு ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் காமினி ரெறன்ஸ் சில்வா தெரிவித்தார்.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சீ.வி.குணரத்தின உடனடியாக விபத்து நிகழ்ந்த இடத்துக்குச் சென்றார்.

விமானத்தில் இருந்தவர்களில் ஒருவர் காணாமற்போய் விட்டதாக அமைச்சர் பின்னர் தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான விமானத்தின் அடிப்பாகத்தில் இவர் சிக்கியிருக்கக்கூடும் என்பதைக் கண்டுபிடிக்க மீட்பு ஊழி

(8ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் சேற்றில் விழுந்ததால் தீப்பிடிக்காது தப்பிக்கொண்டது

### ரஷ்யவிமானி ஒருவரும் இருந்தார்

கொழும்பு, பெப். 22

நேற்று இரத்மலானையில் வீழ்ந்து விபத்துக்குள்ளான 'அன்ரனோவ்' விமானம் சேற்று நிலத்தில் வீழ்ந்ததால் தீப்பிடிக்காது தப்பிக் கொண்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விமானத்தில் இருந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளருக்குத் தடை!

### படம் எடுக்கவும் அனுமதி இல்லை

கொழும்பு, பெப். 22

விபத்துக்குள்ளான அன்ரனோவ் விமானம் பற்றிய செய்திகளைச் சேகரிக்க இரத்மலானை விமான நிலையத்துக்குச் சென்ற பத்திரிகையாளர்கள் அங்கு கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

சேதத்துக்குள்ளான விமா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் நேரடியாக பேசவே அரசு விருப்பம்

### லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகின்றார்

''விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசுவதிலேயே அரசு அக்கறை கொண்டுள்ளது. மூன்றாம் தரப்பு மத்தியஸ்த முயற்சி வெளியார் தலையீடாகவே அமையும்''

இவ்வாறு வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் றொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் நேரடியாகவே பேச விரும்புகின்றது என்று திட்டவட்டமாக அவர் தெரிவித்தார்.

பிரிட்டன், கனடா போன்ற நாடுகள் இலங்கை இனப் பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க விருப்பம் தெரிவித்த போதிலும் அதற்கு சாதகமான சமிக்ஞை எதனையும் இலங்கை அரசு வெளிக்காட்டாது இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BEACON

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

## கலை A/L 97, 98, 99.

- இந்துநாகரிகம் – ]– திரு. ஜோதீஸ்வரன்
- இந்துசமயம்
- தமிழ் – திரு. R. கண்ணன்

(45436)


# சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெற சிமெந்து ஊழியருக்கு விசேட வசதி

யாழ்ப்பாணம், பெப். 22

காங்கேசன் சிமெந்துக் கூட்டுஸ்தாபன ஊழியர்கள் சுயவருப்பத்தின் பேரில் ஓய்வு பெறும் வகையிலான திட்டம் ஒன்றை சிமெந்து கூட்டுஸ்தாபனம் அறிமுகப் படுத்தியுள்ளது,

இந்தத் திட்டத்தின் பிரகாரம் ஊழியர்கள் ஆகக் கூடியது ஒருலட்சம் ரூபாவை நஷ்டஈடாகப் பெறமுடியும். அலுவலர் தரத்தில் உள்ளவர்கள் ஆகக்கூடியது ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா

## நஷ்டஈடும் கிடைக்கும்

நஷ்டஈட்டைப் பெறமுடியும்.

அத்துடன் ஓய்வு பெறும் ஊழியர்கள் 55 வயதை அடையாவிட்டாலும், ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறவும் வசதி செய்யப்படும் என்றும்—

அத்துடன் பணிக்கொடையும் வழங்கப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# 12 ஆயிரம் பைக்கற் சிமெந்து வந்தது

இலங்கை சிமெந்துக் கூட்டுஸ்தாபனம் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு 12 ஆயிரம் ''பக்கற்'' சிமெந்தை எடுத்து வந்துள்ளது.

சிமெந்துக் கூட்டுஸ்தாபன தலைவர் சி. எச். டி. திசேரா பொது முகாமையாளர் பி. ஏ. எஸ். பொன்னம்பெரும ஆகியோரின் ஏற்பாட்டில் இந்தச் சிமெந்து எடுத்து வரப் பட்டுள்ளது.

கூட்டுஸ்தாபனத்தின் விற்பனை நிலையம் ஊடாக இந்தச் சிமெந்து விற்பனை தற்போது செய்யப்படுகிறது.

குடாநாட்டு மக்களுக்கு அவசர தேவையான சிமெந்தைமேலும்எடுத்துவர சிமெந்துக் கூட்டுஸ்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ-3)

# போதனா வைத்தியசாலையில் மூளை நரம்பு சிகிச்சை நிபுணர்

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள வைத்திய பீட மாணவர்களுக்கு சத்திர சிகிச்சை, மூளைநரம்பு சத்திரசிகிச்சை தொடர்பான போதனைகளை வழங்க கொழும்பில் இருந்து, மூளை நரம்பு சத்திரசிகிச்சை நிபுணர் வி. குணானந்தன் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அவர் கடந்த வியாழன் முதல் போதனா வைத்தியசாயில் தனது கடமையை ஆரம்பித்துள்ளார்.

சுமார் மூன்று வாரங்கள் கடமையாற்ற வந்திருக்கும் இந்த நிபுணர், இக்கால வேளையில் மூளைநரம்பு சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கான சிகிச்சைகளையும் மேற்கொள்வார் என்று தெரிய வருகிறது.

இதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன் யாழ். போதனா வைத்தியசாலையில் மகப்பேற்று நிபுணராக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய மகப்பேற்று நிபுணர் கருணாகரன் மீண்டும் கடந்தவாரம் முதல் யாழ். போதனாவைத்தியசாலையில் தமது கடமைமை ஏற்றுள்ளார். (இ-15)

# தென்மராட்சி மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் கடன்

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீன்பிடி படகுகள், வலைகள் ஆகியவற்றை இழந்த மீனவர்களுக்கு 90 சதவீத மானிய அடிப்படையில் கடன் வழங்கப்படவுள்ளது.

கடற்தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட படகுகளின் உரிமையாளர்களும், தொழிலின் போது சேதமடைந்த அல்லது காணாமல் போன வலைகளின் உரிமையாளர்களும் தமக்கு ஏற்பட்ட இழப்புகளின் விவரங்களை எழுதி தத்தமது பிரிவு கிராம அலுவலர், கடற்தொழில் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆகியோர் ஊடாக நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் பிரதேச கடற்தொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

படகுகளை இழந்த அல்லது பாவிக்க முடியாத நிலையில் உள்ள படகுச் சொந்தக்காரர்களுக்கு ரூபா 60 ஆயிரமும், வலைகளை இழந்த அல்லது பாவிக்க முடியாத நிலையில் உள்ள வலைச் சொந்தக்காரர்களுக்கு ரூபா 25 ஆயிரமும் கடனாக வழங்கப்படவுள்ளது.

இக் கடனில் 90 சதவீதம் மானியமாகவும் 10 வீதம் மீளச் செலுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.


அரியாலை

## பனை. தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்ட

## அறிவித்தல்

அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்றவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 15-03-1997 ஆம் திகதி சனிக்கிழமையன்று முற்பகல் 11.00 மணிக்கு சங்க உபதலைவர் திரு. க. ஜெகசோதி அவர்களது தலைமையில் சங்கக் கூட்டமண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஏதாவது பிரேரணைகளை அனுப்ப இருக்கும் பொதுச் சபைப் பிரதிநிதிகள் தமது பிரேரணைகளை 01 - 03 - 1997 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக ''செயலாளர், அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், 15, நடுத்தெருலேன், அரியாலை'' என்ற முகவரிக்கு எழுத்து மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள், கூட்ட நிகழ்ச்சி நிரல் காலக்கிரமத்தில் தெரிவிக்கப்படும்.

நன்றி!

க. ஜெகசோதி. உபதலைவர்.

க. குணசேகரம். செயலாளர்.

15, நடுத்தெரு ஒழுங்கை.
கண்டி வீதி,
அரியாலை.

(சி/192)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகரத்தினம் சண்முகம்

கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீராவியடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான நாகரத்தினம் சண்முகம் 21- 02- 97இல் காலமாகி விட்டார்.

அன்னார் மலாயன் பென்ஷனியர் சண்முகம் அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் (கூட்டுறவு உதவி ஆணையாளர்), பாலசுப்பிரமணியம் (C. C, P. W. D. கனடா), திருமதி யோகாம்பிகை, திருமதி அன்னலட்சுமி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தாயாரும், நாகேந்திரம், காலஞ்சென்ற இராசேந்திரன், ஜெயலட்சுமி, நகுலநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 22- 02- 97 மு. ப. 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல், தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
நவரத்தினசிகாமணி (பேறாமகன்)
சந்திரசேகரம் தவராசா (மருமகன்)

10/1, இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(9308)

## சின்னத்தம்பி நடராசா

அரியாலையை வசிப்பிடமாகக் கொண்டவரான சின்னத்தம்பி நடராசா 21 – 02 – 1997 இல் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், கமலநாயகி துரைசிங்கம், வாமசிவன் (கொமேஷல் டிஸ்ரிபியூட்டர்ஸ்), வாமதேவன் (கனடா), வாமபாகன் (நோர்வே), தேவநாயகி பாலசுந்தரம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் மாலதி, மாலினி, உமாபதி, பாலசுந்தரம் ஆகியோரின் மாமனாரும், சுஜாதா, வினித்தா, செந்தில்குமரன், செந்தில்நாதன் (மாணவன், பரியோவான் கல்லூரி), வசந்தா, தட்சாயினி (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,) விஷ்ணுவர்த்தன் (பரியோவான் கல்லூரி), ராஜேந்திரகுமார், மஞ்சுளா, டிலானி, கபிலன், குயிலினி, திலீபன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 22-02-1997 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
ந. வாமசிவன் (மகன்)

6, வில்வம் தெரு வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(45436)

## மனித வள கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 22

மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ள 'மனிதவள மேம்பாடும் விழுமியங்களும்' என்னுங் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பிரதேச இளைஞர் வள நிலைய அங்கத்தவர்கள் 50 பேர் இக் கருத்தரங்கில் கலந்து கொள்வர். (ஐ)

## படுத்திருந்த மாணவி காயம்

தென்மராட்சி, பெப். 22

பளை இத்தாவில் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் வீட்டினுள் படுத்திருந்த மாணவி ஒருவர் காயமடைந்தார்.

இதே இடத்தைச் சேர்ந்த மு. பவானி (வயது 18) என்பவரே காலில் காயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கடந்த திங்கள் இரவு11.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-117)

## கணக்காய்வு கலந்துரையாடல்

கொழும்புத்துறை, பெப். 22

கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வு பற்றிய கலந்துரையாடல் கோவில் வீதியில் உள்ள கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல்10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டுறவு உதவி ஆணையாளரிடம் (கணக்காய்வு) விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களும், மாவட்ட கூட்டுறவுச் சபையின் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் சாதாரணதர, உயர்தர பயிற்சிபெற்று சித்தியடைந்தவர்களும் இந்தக் கலந்துரையாடலுக்குஅழைக்கப்பட்டுள்ளனர். (ஐ 30)

## பதவி உயர்வு

சண்டிலிப்பாய், பெப். 22

மக்கள் வங்கியின் கொழும்புத் தலைமைப் பீடத்தில் பணியாற்றிய எஸ். சிவசிதம்பரம் கடந்த மாதம் முதல் யாழ். மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளராகப் பதவி உயர்வுடன் இடம் மாற்றப்பட்டிருக்கிறார். (ஐ-135)

## விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கும் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர் பிரிவுப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதி நாள் எதிர்வரும் [illegible] 3ஆம் திகதியாகும். (ஐ-4)


## கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.

## தற்காலிக அடிப்படையில் பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் நியமனத்துக்கான விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணப் பிரதேசப் புனரமைப்பு வேலைகளுக்கெனத் தற்காலிக அடிப்படையில் பொறியியலாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப்பரீட்சை, யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் 97 - 02 - 26 ஆம் திகதி பிற்பகல்1. 00 மணிக்கு நடைபெறும். தகைமையுடையவர்கள் அன்றைய தினம் தகைமைச் சான்றிதழ்களுடன் நேர்முகப்பரீட்சைக்கு வருகை தருதல் வேண்டும்.

தேசியத் தொழில் நுட்ப டிப்ளோமா (N.D.T) தேசிய தொழில் நுட்ப தராதரப்பத்திரம் (N.C.T.) தகைமைச் சான்றிதழ் உடையவர்கள் சுயவிவரத்துடன் 97 - 02 - 25 ஆம் திகதி பி. ப. 2 மணிக்கு முன்னதாக இத்திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

சு. இரத்தினராசா,
கல்விப்பணிப்பாளர்,
யாழ். வலயம். 01

கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். 97 - 02 - 20

(சி/181)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்

# ★மறைந்த சீனத் தலைவரின் இறுதிச்சடங்கு செவ்வாயன்று

பீஜிங், பெப். 22

மறைந்த சீனத் தலைவர் டெங் ஷி ஓ பிங்கின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் செவ்வாயன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வழமையான மரபின்படி பிங்கின் சடலம் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படமாட்டாது.

சடலம் தகனம் செய்யப்பட்ட பின்னர் அவரது அஸ்தி மட்டும் சீனப்பெரு மண்டபத்தில் வைக்கப்படும்.

சீனா கம்யூனிஸ்ட் கட்சி, இராணுவம், பொதுமக்கள் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 10 ஆயிரம் பேர் அவரின் அஸ்திக்கு அஞ்சலி செலுத்துவர்.

சீனா முழுவதும் தொழிற்சாலைகள் கப்பல்கள், ரயில்கள் கள் என்பனவற்றில் 3 நிமிட நேரத்துக்கு சங்கொலி எழுப்பப்படும். (ஐ)

# ஜனாதிபதியின் மகன் எனக்கூறி காஷ்மீரில் இளைஞன் ரகளை!

ஸ்ரீநகர், பெப். 22

இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள்சர்மாவின் மகன் எனக்கூறிக் கொண்டு இளைஞர் ஒருவர் காஷ்மீரில் ரகளையில் ஈடுபட்டுள்ளார்.

18 வயதுடைய இந்த இளைஞர் தான் ஜனாதிபதியின் அலுவலர் என்று முதலிலும், பின்னர் மகன் என்றும் கூறி அதிகாரிகளை ஏமாற்றி அதி உயர் பாதுகாப்பையும் பெற்றுள்ளார்.

அவருக்கு குண்டு துளைக்காத வாகனமும், இராணுவப் பாதுகாப்பும் அதிகாரிகளால் வழங்கப்பட்டன.

பின்னர் அந்த இளைஞர் காஷ்மீர் மொழியில் சரளமாக உரையாடுவதை அவதானித்த அதிகாரிகள் அவன் ஒரு ஏமாற்றுக்காரன் என்பதை அறிந்து கொண்டனர். உடனடியாக அந்த இளைஞர் கைது செய்யப்பட்டார். (ஐ-10)

# 'பிரிதுவி' ஏவுகணை நாளை பரீட்சிப்பு!

## இந்தியா நடத்துகிறது

புதுடில்லி, பெப். 22

நடுத்தர வீச்சுக் கொண்ட ''பிரிதுவி'' ஏவுகணையை நாளை இந்தியா பரீட்சித்துப் பார்க்கவுள்ளது.

தரையில் இருந்து தரையில் உள்ள இலக்கை நோக்கி ஏவப்படும் இந்த ஏவுகணை ஒரிஸாவில் நாளை செலுத்தப்படும்.

ஒரிஸாவில் இந்த பரீட்சார்த்த சோதனை நடைபெறவிருப்பதை அடுத்து பலசோர் என்ற நகரைச் சுற்றி வசிக்கும் மக்கள் தற்காலிகமாக அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

150 கிலோ மீற்றர் முதல் 250 கிலோ மீற்றர் வரையான வீச்சுக் கொண்ட இந்த ஏவுகணை ஒரு தொன் நிறையுள்ள அணு இரசாயனத்தை அல்லது வெடிமருந்தை கொண்டு செல்லக் கூடியது.

ஏற்கனவே இந்த ஏவுகணை 15 தடவைகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

# ஐ.நா பாதுகாப்பு சபை உறுப்புரிமை; இந்தியாவின் நிலைப்பாடு மாறாது!

## அந்நாட்டின் தூதுவர் வலியுறுத்துகிறார்

நியுயோர்க் பெப். 22

வளரும் நாடுகளின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளாமல் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் எந்த நடவடிக்கையையும் இந்தியா ஏற்காது.

இவ்வாறு இந்திய அரசு தெளிவாக — திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

ஐ நா. சபையில் வளர்ந்த நாடுகளினதும், வளர்ந்து வரும் நாடுகளினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கை சமச்சீராக இருக்கவேண்டும் என்று ஐ. நாவுக்கான இந்தியத் தூதர் தெரிவித்துள்ளார்.

ஐ நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை கோரும் இந்தியாவின் நிலைப்பாட்டை பல நாடுகள் ஆதரித்திருப்பது தெரிந்ததே. (ஐ)

# உலக அரங்கில்

## பூலான்தேவி பேட்டி

புதுடில்லி, பெப். 22

தற்போது தலைமறைவாக இருக்கும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் பூலான்தேவி கடந்த வியாழனன்று தனது மறைவிடத்தில் இருந்து கொண்டு தொலைக் காட்சி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டி அளித்துள்ளார்.

தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாலும், உடல் நிலை சரியில்லாத காரணத்தாலும் தான் தலைமறைவாக இருப்பதாக பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

பூலான்தேவி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள கொலை வழக்குகள் தொடர்பாக அவரை எங்கிருந்தாலும் கைது செய்யும்படி இந்திய உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது தெரிந்ததே. (ஐ-10)

## ஈரானிய கலாசார மையத்தை பாதுகாக்கத் தவறிவிட்டது

### பாகிஸ்தான் மீது குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், பெப். 22

பாகிஸ்தானில் உள்ள ஈரானிய கலாசார மையங்களைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருந்து பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகள் தவறிவிட்டனர்.

இவ்வாறு ஈரான் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்று முன்தினம் முல்றா நகரில் ஈரானிய கலாசார மையப் பகுதியில் ஆயுதபாணிகள் நடத்திய தாக்குதலில் ஈரானிய ராஜதந்திரி ஒருவரும் மற்றும் ஏழு பேரும் பலியாகியுள்ளனர்.

இச் சம்பவத்தை அடுத்தே பாகிஸ்தான் மீது ஈரான் குற்றஞ் சுமத்தியுள்ளது.

ஈரானிய கலாசார மையத்தைப் பாதுகாக்க பாகிஸ்தான் பொலீஸார் ஆதரவளிக்கவில்லை என்று ஈரானின் துணை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார் (ஐ)

## திபெத் மக்கள் நம்பிக்கை

திபெத், பெப். 22

சீனத்தலைவரின் மறைவு, தங்கள் சுயாட்சிக் கோரிக்கை தொடர்பாக சீன அரசுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வழியை ஏற்படுத்தும் என திபெத் மக்கள் நம்புகின்றனர்.

திபெத் மக்களைப் பொறுத்த வரை பிங்கின் மறைவுஒரு புது யுகத்தின் ஆரம்பம் என்று கருதப்படுகிறது. (ஐ-10)

## சிக்காகோவில் நச்சுக் கசிவு

சிக்காகோ, பெப். 22

அமெரிக்கவில் சிக்காகோ நகர்ப் பகுதியிலுள்ள இரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் இரசாயனக் கசிவு ஏற்பட்டு வானத்தில் நச்சுப் புகை மூடியுள்ளது.

பொது மக்களில் சிலர் நச்சுப் புகையினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மறு அறிவிப்பு தரப்படும் வரை வீடுகளை மூடிக் கொண்டு உள்ளே இருக்குமாறு பொதுமக்களுக்கு பொலீஸார் உத்தரவிட்டுள்ளனர். (ஐ-10)

## கொச்சின் கடற்படை ஒத்திகை

புதுடில்லி, பெப் 22

இந்திய மற்றும் சிங்கப்பூர் கடற்படைகள் இணைந்து 10 நாள்பயிற்சியைகொச்சின் கரைக்கு அப்பால் இன்று ஆரம்பிக்கவுள்ளன.

நீர் மூழ்கிக் கப்பல்களைத் தாக்குவது தொடர்பான விசேட பயிற்சியில் இரு நாட்டு கடற்படைக் கப்பல்களும் ஈடுபடும். (ஐ)

# ★ அபிவிருத்திப் பணிகளைச் செயற்படுத்த பிரதேச செயலகங்களுக்கு நிதி இனிமேல் மாதாந்தம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், பெப். 22

பிரதேச செயலகங்களால் மேற்கொள்ளப்படும் பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி வழங்குவதில் புதியநடைமுறை ஒன்றை மாகாணசபை கொண்டுவந்துள்ளது.

இது வரை பிரதேச செயலகங்கள் தமது பிரிவில் மேற்கொள்ளத் திட்டமிடும் திட்டங்கள் பற்றிய விவரங்களை வருட ஆரம்பத்தில் மாகாண சபைக்கு அனுப்பி அவற்றுக்கான நிதியான 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒரேயடியாகப் பெற்று வந்தன.

இவ் வருடம் முதல் அமுலாலாகியுள்ள புதிய நடைமுறைப்படி, வருட ஆரம்பத்தில் ஒரு லட்சம் ரூபா கட்டு நிதியாக பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்படும்.

பின்னர் மாதாந்தம் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து பிரதேச செயலர்கள் அறிக்கை தயாரித்து அனுப்ப வேண்டும். அதனை பரிசீலித்த பிறகே அந்த மாதத்திற்கான நிதி அனுப்பப்படும்.

இந்தப் புதிய நடைமுறை தொடர்பான சுற்றறிக்கை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (ஐ-3)

## யாழ். ஆயர் விஜயம்

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை இன்றும் நாளையும் தாளையடி பங்குப் பிரிவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

கிறிஸ்துவின் பாடுகளை நினைவு கூரும் தவக் காலத்தை ஒட்டியே ஆயர் இங்கு விஜயம் மேற்கொள்கிறார். (ஐ-36)

## சேவைக்கால பயிற்சி இன்று

யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டுக்குட்பட்ட பாடசாலைகளில் விவசாயம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்பு இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரியில் நடைபெறும். இதில் விவசாய பாடம் பற்றிய புதிய பாடத்திட்டம், விவசாயக் கல்வி அபிவிருத்தித் திட்டம் ஆகியன பற்றி ஆராயப்படும். (ஐ-152)

# படம் பிடிக்க முயன்ற மாணவனை சிங்கம் தாக்கிக் கொன்றது!

## மிருகக்காட்சி சாலையில் விபரீதம்

கொழும்பு, பெப். 22

சிங்கத்துக்கு அருகே நின்று புகைப்படம் பிடிக்க முயன்ற பாடசாலை மாணவன் ஒருவன் அந்தச் சிங்கத்தின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தான்.

— தென்பகுதியில் உள்ள அஹங்கல மிருகக் காட்சிச் சாலையில் இப்பரிதாப சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு மிருகக் காட்சிசாலைக்கு சென்ற வேளையே அங்கு காணப்பட்ட எச்சரிக்கை அறிவிப்புகளையும் மீறி இந்த மாணவன் நடந்து கொண்டதால் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான். (ஐ-10)

# நிவாரண முத்திரை விநியோகம் தென்மராட்சியில் அடுத்த வாரம்

தென்மராட்சி, பெப். 22

தென்மராட்சி பிரதேசத்தில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கும், வன்னிப்பகுதியிலிருந்து தமது சொந்த இடங்களுக்கு திரும்பியவர்களுக்குமான நிவாரண உணவு முத்திரைகள் பிரதேச செயலக புனர்வாழ்வுப் பிரிவினரால் வழங்கப்படவுள்ளன.

அடுத்தவாரம் முதல் அந்தந்த கிராமசேவை அலுவலர்கள்மூலம் இவை வழங்கப்படவுள்ளன.

இதேவேளை பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்தந்தப் பிரிவு இராணுவப் பொறுப்பதிகாரிகளின் சிபார்சுடன் நிவாரண முத்திரைகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# கொங்கிறீட் தூண்களை தயாரிக்க தொழிற்சாலை

## உரும்பிராயில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், பெப், 22

கொங்கிறீட், சிமெந்து தூண்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று உரும்பிராயில் அமைக்கப்படவிருக்கிறது.

முன்னர் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் இயங்கிவந்த இதேவகையான தொழிற்சாலை 1990 ஆம் ஆண்டு மூடப்பட்டது.

இதே வகையான தொழிற்சாலையை தற்போது உரும்பராயில் அமைக்க சிமெந்துக் கூட்டுஸ்தாபன தலைமைப் பீடம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த தொழிற்சாலைக்கான தளபாடங்கள், உற்பத்திக்கு தேவையான பொருள்கள் கப்பல் மூலம் எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது.

தற்போது மின்சார விநியோக தூண்களுக்கு நிலவும் தட்டுப்பாடு இதனால் நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-3)

## தீ விபத்தில் படுகாயம்

குப்பி விளக்கு சரிந்து விழுந்து தீப்பிடித்ததில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். உரும்பிராய்ப் பகுதியில் அண்மையில் நடந்த இவ் விபத்துச் சம்பவத்தில் நவரத்தினம் குகவதி (வயது 30) என்ற பெண்ணே காயமடைந்தார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஐ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்ப் பூக்கள்

எமது ஆருயிர்த்தோழி

**ஜனதினியின்** ஆசை அண்ணா

### செல்வன் ஸ்ரீஸ்கந்தராசா ஸ்ரீதர்சன்

அவர்களின் மறைவையொட்டித் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(45428) **99 A/L தோழிகள்**

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: **12—10—1930**

உதிர்வு: **22—02—1994**

### திருமதி மேரி ராசமலர் நவரத்தினம்

''இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று நான் உறுதியாக உனக்கு சொல்லுகிறேன்''

(லூக். 23:43)

இவரின் ஆன்ம சாந்திக்காக மிருசுவில் புனித நீக்கொலஸ் தேவாலயத்திலும், யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்திலும், யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்திலும் இன்று (22 - 02 - 97) சனிக்கிழமை காலை 6. 30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கு பற்றி அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரன்.**

இராஜஸ்தான்,
மிருசுவில். (45395)

## உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் (வ/து)

## வெற்றிடம்

கீழ்வரும் பதவிக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி: கணக்காளர்** (104/10)
**02. வேதனம்:** 1005/- 40x5 -50x10-1705/-
**03. வயது:** 05-03-97 ஆம் திகதியன்று 25 இற்கும் 55இற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**04. கல்வித் தகைமை:-**

குறியீட்டு இலக்கம் 11 இல் அமைந்த கணக்குப் பதிவுநர்/ எண்பார்வை எழுதுநர் பதவியில் 03 வருடங்களிற்குக் குறையாத அனுபவம் அல்லது குறியீட்டு இலக்கம் 12 இல் அமைந்த இதே பதவிகளில் 06 வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஐக்கிய இராச்சிய கணக்கு வைப்போர் தராதர இறுதிப் பரீட்சையில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கு வைத்தல், கணக்கு ஆய்வு செய்தல் சம்பந்தப்பட்ட பதவிகளில் 02 வருடங்களிற்கு குறையாத மேற்பார்வை அனுபவம்.

அல்லது

ஐக்கிய இராச்சிய கணக்கு வைப்போர் பரீட்சையில் இடைநிலை பிரிவுச் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கு வைத்தல் கணக்கு ஆய்வு போன்ற பதவிகளில் மேற்பார்வை தரத்தில் 04 வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவு வேலையாளர் தராதரம் (உயர் தரம்)அல்லது கல்வித் பொதுப் தராதரப் பத்திரம் உயர்தரத்தில் கணக்கியல் உட்பட 4 பாடங்களில் பெற்ற சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் கணக்கு வைத்தல், கணக்கு ஆய்வு செய்தல் போன்ற பதவிகளில் 04 வருடங்களிற்குக் குறையாத அனுபவம்.

குறிப்பு:-

கூட்டுறவுப் பணியாளர்களிற்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது. அத்துடன் விண்ணப்பதாரரின் திறமை அனுபவத்தைக் கருத்திற் கொண்டு சம்பளத் திட்டத்தின் பொருத்தமான இடத்தில் வைக்கப்படுவர்.

விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் மற்றும் நற்சான்றிதழ் என்பனவற்றின் பிரதிகளுடன் பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், உடுப்பிட்டி என்னும் முகவரிக்கு 05 - 03 - 97 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பொது முகாமையாளர்.**

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
உடுப்பிட்டி. (சி-175)

## சமய சந்நிதிகளில்

மாசி மகத்தை ஒட்டி இணுவில் ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்மன் கோயிலில் நடைபெற்று வந்த இலட்சார்ச்சனை இன்று பூர்த்தியடைகிறது. சங்காபிஷேகம், தீபபூசை என்பன இன்று இடம்பெறும்.

(ஐ-152)

★ ★ ★

திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோயிலில் கடந்த 10 நாள்களாக இடம்பெற்று வந்த மாசிமக இலட்சார்ச்சனை ஹோமத்தின் இறுதி நாள் இன்றாகும்.

அர்ச்சனைப் பூர்த்தியும், விசேட திரவ்யஹோம பூர்த்தியும், உபசார பூஜையும் இன்று இடம் பெறவுள்ளன.

(ஐ)

★ ★ ★

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து16 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

(ஐ)

★ ★ ★

சங்கானை நிகரை ஞான வைரவர்ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமைமுடிவடைகிறது. இதனை ஒட்டி இன்று காலை மகாசங்காபிஷேகமும் மாலையில்சுவாமிவீதியுலாவும் இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயிலில்இன்றுசனிக்கிழமை காலை 6 மணிமுதல் மாசிமக சங்காபிஷேகம் இடம்பெறும். மாலையில் அம்பாள் வீதியுலா வருவார். (ஐ 30)

★ ★ ★

பருத்தித்துறை தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோயில் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. மஹோற்சவத்தின் இறுதி நாளான இன்று சமுத்திர மாசிமக தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது.

(ஐ-15)

★ ★ ★

உடுப்பிட்டி இமையாணன் துவாளி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையர் கோயிலில் தீர்த்தத் திருவிழா இன்று காலை நடைபெறவுள்ளது.

(ஐ-30)

★ ★ ★

அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவரினால் இயற்றப்பட்ட கூட்டுப்பிரார்த்தனைப் பாடல்கள் நூல் வெளியீட்டு விழா அளவெட்டி - நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

(ஐ-4)

## தற்காலிக அட்டைகளுக்கு தடை

தென்மராட்சி, பெப். 22

அரசு முத்திரை பொறித்த தற்காலிக அடையாள அட்டை மட்டைகளை விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரி வணிகர் மன்றம் தமது எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு அறிவித்துள்ளது.

இவ்வாறான மட்டைகள் கடைகளில் இருப்பின் அவற்றை வணிகர் மன்றத்தில் ஒப்படைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசு முத்திரை அச்சிட்ட தற்காலிக அடையாள அட்டைகளுக்கு கையொப்பமிட வேண்டாமென பிரதேச செயலக [illegible] வலியுறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

(ஐ-117)

## புலமைப் பரிசில் '97

16 - 02 - 97 எம்மால் நடத்தப்பட்ட
**11 ஆவது பயிற்சிப் பரீட்சையில்**
முதன்மைப் புள்ளி பெற்ற

**செல்வன் த. நிரஞ்சனை பாராட்டுகிறோம்.**

23 - 02 - 97 ஞாயிறு வழமைபோல் பரீட்சை நடைபெறும்.

**BOND INSTITUTES -யாழ்ப்பாணம்**

(45425)

## மாணவ தாதிகள் தேர்வு நேர்முகப் பரீட்சை - 1997

மேற்படி தெரிவு சம்பந்தமாக எனது பணிமனையில் **29-01-1997** இல் சமுகமளிக்காத விண்ணப்பதாரிகள் ஏற்கனவே கோரப்பட்ட ஆவணங்களுடன் எதிர்வரும் **27-02-97** காலை 9-00 மணிக்கு சமுகமளிக்கவும்.

**பணிப்பாளர்.**

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
20-02-1997. [சி-179]

### கூட்டுறவு அபிவிருத்தி

**ஆணையாளராக (பனை தென்னை வளம்)**
**பதவி உயர்வு பெற்ற**

### திரு. காசிநாதன் பரநிருபசிங்கம்

அவர்களின்

## () பாராட்டு விழா ()

மேற்படி விழா 23 - 02 - 97 நாளை ஞாயிறு மு. பகல் 9.30 மணிக்கு நீர்வேலி பிராந்திய சபை மண்டபத்தில் பிராந்திய சபைத்தலைவர் திருமதி ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறும். அனைத்து அங்கத்துவ சங்கங்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- நன்றி -

**மு. ஜெகதீஸ்வரி,**
செயலாளர்.

**கோப்பாய் பிராந்திய சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்.**

(45434)

சிவன் கழலே துணை

**சேவையில் உயர்ந்த செம்மலின்**

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### செல்லையா தர்மலிங்கம்

(நிர்வாக அலுவலர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

**தோற்றம்:** **1942 — 01 — 10**

**மறைவு:** **1996 — 02 — 22**

புன்னகை பூர்த்துப் பொலியும் உன் முகமும்
பொதுப்பணிக்கமைந்த நின் வாழ்வும்
இன் சொல்லும், செயலும், எளிமையும், அடக்கம்
எனும் தலைசிறந்த அப்பண்பும்,
அன்பும், நுண்ணறிவும் உன்னை
எம் நெஞ்சில் அன்பின் ஓவியமாக
இன்னமும் - என்றும் - நிறுத்தும் ஐயா!
நம் இதய அஞ்சலி உரித்துனக்கு.

**நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.**

(9337)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை குதத்தில் இருந்து வடக்கே மண்எண்ணெய்

## மாதாந்தம் 10 லட்சம் லீற்றர் கிடைக்கும்

யாழ்ப்பாணம், பெப். 22

குடாநாட்டுக்குத் தேவையான மண்எண்ணெயை திருமலையில் இருந்து கூடுதலாக எடுத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்சமயம் கொழும்பில் இருந்து மண்எண்ணெய் ஏற்றிக் கொண்டு காங்கேசன் துறைக்கு வந்துள்ள கொள்கலன் கப்பல் இனிமேல் காங்கேசன்துறைக்கும், திருமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு திருகோணமலையில் உள்ள பெற்றோலியம் கூட்டுஸ்தாபன குதத்தில் இருந்து மண்எண்ணெய் ஏற்றிவர ஏற்பாடாகியுள்ளது.

இக்கப்பல் கொழும்பு சென்று மண்எண்ணெய் எடுத்து வருவதால் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில் இப்புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த புதிய ஏற்பாட்டின்படி மாதாந்தம் 10 இலட்சத்துக்கும் அதிகமான லீற்றர் மண்எண்ணெய் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களுக்கு தாராளமாக மண்எண்ணெய் வழங்கும் நோக்கில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பெற்றோலியம் கூட்டுஸ்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

# வறுமை நிவாரணப் பணிகள் புனர்வாழ்வு அமைச்சிடம்

## திணைக்களம் மூடப்பட்டது

வறுமை நிவாரணத் திணைக்களம் மூடப்பட்டு, அதன் பணிகள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட இத் திணைக்களம் ''ஜனசக்தி'', ''ஜனசவிய'' திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்தது.

அத்துடன் ஆயிரத்து 500 ரூபாவுக்கு கீழ் வருமானம் பெறும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள — குடும்பங்களுக்கு உணவு முத்திரைகளையும் அது வழங்கி வந்தது.

தற்சமயம் இத் திணைக்களத்தை மூடி அதன்பணிகள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உணவு முத்திரை பெற்று வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சமுர்த்தி திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

சமுர்த்தி திட்டம் இதுவரை அமுல் செய்யப்படாத பகுதிகளில் உணவு முத்திரை பெற்று வந்தவர்களுக்கு அதற்குப் பதிலாக அமுல் செய்ய வேண்டிய மாற்றுத் திட்டம் குறித்து புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ஆராய்ந்து வருகிறது. (ஐ-3)

# சாயி பாபா ஆத்மீகக் கல்வி கருத்தரங்கு

கல்வியங்காடு பகவான் ஸ்ரீ சத்யசாயி பஜனை நிலையம் ஏற்பாடு செய்துள்ள சாயி பாபாவின் ஆத்மீக கல்வி பற்றிய கருத்தரங்கு இன்று காலை 9.30 மணிமுதல் செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

'கல்வியின் நோக்கம்' என்னும் தலைப்பில் பேராசிரியர் செ. சிவஞான சுந்தரமும் (நந்தி) —

'கற்பிக்கும் முறை' என்ற தலைப்பில் சாயி நிறுவனங்களின் கல்வி இணைப்பாளர் திருமதி ம. சரவணபவனும்-

''வாழ்வில் ஆன்மீகம்'' என்ற தலைப்பில் சாயி நிறுவனங்களின் ஆன்மீக இணைப்பாளர் ஆர். சரவணபவனும் உரையாற்றுவார்.

இறுதியில் பாலவிகாஷ் மாணவரின் நாடகமும் இடம்பெறும். (ஐ)

# யாழ். பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்தித் திட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். பிரதேச செயலக பிரிவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் பிரமாண அடிப்படையிலான நிதி மூலம் மேற்கொள்ளபடவிருக்கின்றன.

மிகமோசமான நிலையில் உள்ள 5 வீதிகளை திருத்துதல், 4 வடிகால்கள் புனரமைத்தல், 7 பாடசாலைகளை ஆரம்பக்கல்வி அபிவிருத்திக்காக நவீனமயப்படுத்தல், ஐந்து பாடசாலைகளின் நூலகங்களுக்கு நூல்கள் வழங்கல் மற்றும்குருநகர் மருந்தகம், யாழ். மத்திய கல்லூரியில் உள்ள பற்சிகிச்சை நிலையம் ஆகியவற்றுக்கு உபகரணங்கள் வழங்குதல், தென்னை நாற்றுக்களை உற்பத்தி செய்ய தென்னை அபிவிருத்தி சபைக்கு நிதி வழங்கல் உட்பட மற்றும் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட விருக்கின்றன. (ஐ-3)

# நீங்காத நினைவில்...

மறைவு: 07 — 03 — 1996



திதி: 22 — 02 — 1997

## திருமதி புவனேஸ்வரியம்மா சோமசுந்தரக்குருக்கள்

(நவாலி, அந்திரான் முருகமூர்த்தி ஆலய முன்னாள் பிரதம குருக்களின் பாரியார்)

வாழ்வுக்கு வழிசமைத்த வழிகாட்டி
விழிமூடி ஓராண்டு உருண்டோடி விட்டது.
நிறைவுகளைச் சுமந்த வண்ணம்
நின்று வேண்டுகிறோம்
ஆண்டவனின் காலடியில்
ஆன்மா அமைதிபெற ...

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மடம் ஒழுங்கை,
கல்வியங்காடு.

(சி/ 180)

# பாசத் தளையறுக்கும் மாசி மக விரதம்

இன்று மாசி மக நன்னாளாகும்.

சிவ விரதங்களுள் சிறந்ததாகக் கருதப்படுபவற்றில் மாசி மாதத்தில் வரும் மக நட்சத்திர நாள் மேன்மை வாய்ந்ததாகும். மாசிமக விரதமிருந்தால் பாசவினையகலும் என்பார்கள். ஆகவே சைவமக்கள் இந்த மாசிமக நாளை பக்தி சிரத்தையோடு விரதமிருந்து சிவபெருமானை அர்ச்சித்து வழிபடுவர்.

மாசிமக நன்னாளின் மகிமை பற்றி கர்ண பரம்பரையாக சில வரலாற்று உண்மைகள் விளங்கி வருகின்றன.

ஒருசமயம் மழைக்கு அதிபதியான வருணபகவானை பிரம்ஹத்தி தோஷம் பீடித்துக் கொண்டது. அது அவரைச் சமுத்திரத்தினுள் கட்டி வைத்திருந்தது. இதனை அறிந்த தேவர்கள் இவ்விடயத்தைச் சிவபிரானிடம் முறையிட்டனர். தேவர்களின் வேண்டுதலுக்கிரங்கிய பரமேஸ்வரன் திருவுள்ளம் மகிழ்ந்து எழுந்தருளி வந்து வருணபகவானின் கட்டை அறுத்தருளினார். அவ்வாறு இறைவன் வந்து கட்டறுத்த தினம்தான் மாசிமகம்.

விடுதலை பெற்ற வருணபகவான் பயபக்தியோடு பரமனை வணங்கி, 'ஐயனே! இந்த நன்னாளாம் மாசிமகத்தில் சமுத்திரம், ஆறு, நதி முதலானவற்றில் புண்ணிய தீர்த்தமாடுபவர்களின் பாசத்தளைகளை நீக்கியருளி, பரமானந்த முத்தியை ஈந்தருள வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டார். அன்று முதல் மாசி மகத்தீர்த்தமாடுபவர்கள் மாசிலா முத்திபெறுவது திண்ணமாயிற்று.

சிவபிரானை மதிக்காமல் அவருக்கு அவிர்பாகத்தைத் தரமறுத்ததக்கனின்மகளாக, ஒருமுறை உமாதேவியார் அவதரிக்க நேர்ந்தது அவ்வாறு அம்பிகை அவதரித்த தினமும் இந்த மாசி மகம் தான்.

பிரஹஸ்பதி எனப்படும் வியாழ பகவான் மக நட்சத்திரத்துடன் கூடி கும்பராசிக்குச் செல்லும் போது மகாமகம் என்னும் புண்ணிய காலம் ஏற்படும். இஃது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையே நிகழும் என்பது சோதிட ஆய்வாளர் முடிபு.

மகாமகம் என்பது மாமாங்கம் என மருவிற்று. மட்டக்களப்பிலே மாமாங்கத் தீர்த்தம் என்பது வெகு விமரிசையாக நடைபெறும். இந்தியாவிலே கும்பகோணத்தில் இந்த மாசி மக நன்னாளை ''கும்பமேளா', என்று பெருவிழாவாகக் கொண்டாடுவர்.

மாசி மக நன்னாளில் சிவனடியார்களுக்கு மகேஸ்வர பூஜை (அன்னதானம்) செய்தால் ஆண் குழந்தை பிறக்கும் என்பது ஆன்றோர் நம்பிக்கை.

மாசி மக விரதமிருந்து அடியார்களுக்கு அமுதளித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து சதுர்வித பல புருஷார்த்தங்களையும் பெற்றுய்வோமாக.

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சர மமர்ந்தான்
அடலானேறூரும் அடிகள் அடி பரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்!

— என்ற ஞானசம்பந்தர் பாடல் இந்த மாசிமக மகிமையைப் பறை சாற்றி நிற்கின்றது.

- இராசையா ஸ்ரீதரன்

# தபால் விநியோகத்தில் குளறுபடி

உரும்பிராய்ப் பகுதியில் பொது மக்களுக்கான கடிதங்கள் உரிய முறையில் விநியோகிக்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தபால் ஊழியர்கள் சிலர் கடிதங்களை உரிய முகவரியில் தாமே நேரில் சென்று விநியோகிப்பதை தவிர்த்து வேறு ஆட்கள் மூலம் கொடுத்து அனுப்பி விடுவதாகவும், இதனால் தபால் விநியோகத்தில் தாமதமும் குளறுபடிகளும் இடம் பெறுவதாகவும் பொதுமக்கள் குறைப்படுகின்றனர். (ஐ-15)

# தவக்காலச் சிந்தனை

## (11ஆம் நாள் - சனி)

உண்மை விசுவாசமே உன்னை இரட்சிக்கும். செபம் தபம், தானம் யாவும் வெளிவேடங்களாய் இராமல் உண்மையின் வெளிப்பாடாய் மாறவே இத் தவக்காலம் எமது மனங்களைப் புடமிட சிந்தனைகளைத் தருகிறது. விதைப் பதைத்தானே அறுவடை செய்ய முடியும். அந்த நம்பிக்கையின் அடையாளமாக ''உன் பெயர் பாறை; இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்'' என இராயப்பரின் தலைமையில் அன்று கட்டப்பட்ட திருச்சபை 2,000 ஆண்டைக் காணவுள்ளது. இப்போது ஒவ்வொருவரும் சிந்திக்க வைக்கும் செய்தியினை அப்போது செப்பினார் இறைமகன் இயேசு. ''எதுஎதெல்லாம் மண்ணகத்தில் நீ கட்டுவாயோ, அஃதெல்லாம் விண்ணகத்திலும் கட்டப்பட்டதாகவே இருக்கும்'' [illegible]

யோசப் பாலா

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கம். வருடாந்தப் பொதுக்கூட்டம் -1997

மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டம் 1997-3-23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்றையதினம் 1997ஆம் ஆண்டுக்குரிய சங்க உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இத் தெரிவுக்கான நியமனப் பத்திரங்களை 1997-03-09 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் எனக்குக் குக் கிடைக்கக் கூடியதாக தபால் மூலமாகவோ, அல்லது நேரடியாகவோ அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். நியமனப் பத்திரங்களை இச் செயலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பின்வரும் பதவிகளுக்கு நியமனப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. ஒரு தலைவர், இரண்டு உப தலைவர்கள், ஒரு செயலாளர், இரண்டு உதவிச் செயலாளர்கள், ஒரு பொருளாளர், ஒரு உதவிப் பொருளாளர், இருபத்திரண்டு (22) நிர்வாகசபை அங்கத்தவர்கள்.

**முக்கிய குறிப்பு:**

1. அங்கத்தவர்கள் அனைவரும் 1996 ஆம் ஆண்டு வரையான சந்தாப்பணத்தை 1997 ஆம் ஆண்டு மாசிமாதம் 28ஆம் திகதிக்கு முன் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றிருத்தல் வேண்டும். கட்டத் தவறிய அங்கத்தவர்கள் நடப்பாண்டு உத்தியோகத்தர் தெரிவில் வாக்களிக்கத் தகுதியற்றவராகக் கணிக்கப்படுவார்கள். அவ்வாறான அங்கத்தவர்கள், ஒரு உத்தியோகத்தரைத் தெரிவு செய்யும்போது முன்மொழிந்தோ அல்லது வழிமொழிந்தோ இருந்தால், அத்தெரிவு நிராகரிக்கப்படும்.
2. மேற்படி காலாவதியான தினத்துக்குள் சந்தாப் பணம் கட்டத்தவறியவர்கள் பொதுக்கூட்டத்தில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.
3. சந்தாப்பணம் செலுத்த விரும்பும் அங்கத்தவர்கள் ஆலய காரியாலயத்தில் உங்கள் சந்தாப் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

**நா. வேதநாயகன்**
பிரதேச செயலர்,
சண்டிலிப்பாய்.

வலி. தென்மேற்கு பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய். 1997-02-17.

(45431)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நெல்லுக்குத்தும் 7 ஆம் நம்பர் இங்கிலிஸ்கல்லர், நெல்லு உடைக்கும் சோமஸ்ரீ கல்லர் புதியது. 10 HP 950 RPM இங்கிலிஸ் மோட்டர், 12 இஞ்சி கிறயின்டரின் சட்டி மூடியுடன், தொடர்பு கொள்ளவேண்டியது; அ. சிவபாதம் (சோமு) இருபாலைச்சந்தி, கோப்பாய். [45423]

இறைச்சிக்கோழி (புறோயிலர்) விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். தொடர்பு: லக்கிபாம் புறோயிலர் விற்பனை நிலையம், பலாலிறோட், திருநெல்வேலி. [9303]

இறைச்சிக்கோழி (Broiler) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம், குறிப்பு: காலை 8 30மணி வரை இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும். [9306]

### தேவை

ஐஸ்கிறீம் தயாரிக்கும் மெசின், குளிர்சாதனப் பெட்டிகள், ஜெனறேற்றர் உடன் தேவை. விற்பனைக்கு இருப்பின் உடன் தொடர்பு கொள்ளவும். றிக்கோ ஹோட்டல் 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [45403]

### மணமகள் தேவை

35 வயது 12 இல் செவ்வாய், 32 வயது 8 இல்செவ்வாய், 38 வயது மணமக்களுக்கு மணமகள் தேவை. அம்பாள் திருமண சேவை, ஸ்ரீலங்கா அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். [45419]

### தவறிவிட்டது

இராமலிங்கம் குலசெல்வராணி என்பவரின் கல்விச் சான்றிதழ்கள் அடங்கிய மஞ்சள் கைப்பை 16-2-97 கே.கே.எஸ். துறைமுகத்திலிருந்து, யாழ்ப்பாணத்துக்கான பஸ் பிரயாணத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். ஞா. குகநாதன், உதயன் பணிமனை அல்லது திருமதி கு. சிவனேஸ்வரன், இணுவில் இந்துக் கல்லூரி. [45424]

### வகுப்புகள்

கணிதம் ஆண்டு 6—11, ஆங்கிலம் ஆண்டு 6—11, பிரயோக கணிதம் A/L. வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: ஞானசம்பந்தன் B.Sc, 67, கல்லூரிவீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். [9297]

### ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகள் தீர, விவாகத்தடை, கல்வித்தடை, தொழில் தடை தீர ஆலோசனை வழங்கப்படும். தோஷபரிகாரங்கள் கூறப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். குருக்கள், 140, பருத்தித்துறைறோட், ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயிலடி, யாழ்ப்பாணம். [45366)

## மீண்டும் திறப்பு

மீளக் குடியமர்வின்பின்னர் இயங்காது இருந்த சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தின் 29 ஆவது கிளை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சி. குமாரவேல் கடந்த திங்களன்று கிளையை திறந்துவைத்தார்.

(ஐ-152)

---

மங்களகரமான

## ★ ஆரம்ப விழா ★

# ஜெயா இயந்திர

## மர அரிவுத் தொழிற்சாலை

இன்று (22 - 02 - 1997) சனிக்கிழமை
பிற்பகல் 2-00 மணியளவில்
மதிப்புயர் திரு. சு. சோதிலிங்கம்
(முகாமையாளர், ஹட்டன் நாஷனல் வங்கி)
அவர்கள்
மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

அத்தருணம் எமது அன்புக்குரிய அன்பர்கள்
அனைவரையும் வரவேற்கின்றோம்.

வணக்கம்.

ஸ்தபதி ஆ. ஜீவரட்னம் ஆச்சாரி
ஜீ. ஜெயப்பிரகாஷ் (மகன்)

ஆறுமுகம் சிற்பாலயம்,
காளி கோயிலடி,
திருநெல்வேலி.

(45408)

---

## பிறீமா கோழிக்குஞ்சு

ஐந்து நாள்கள் நிரம்பிய பிறீமா லோமன் இன பேட்டுக்கோழிக்குஞ்சுகள் (வெள்ளை) விற்பனைக்குண்டு. கம்போறா, பவள் பொக்ஸ், ரணிக்கற் நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கப்படும்.

முகவரி: **R. S. K. கோழிப்பண்ணை**
"முருகபதி" உடுவில், சுன்னாகம்.
(உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி)

(45414)

---

## வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் - சைவ பரிபாலன சபையினால்
மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில்
ஆரம்பப் பிரிவில் முதலாம் பரிசாக
**தங்கப் பதக்கத்தைப் பெற்ற**
யா/ இணுவில் மத்திய கல்லூரியைச் சேர்ந்த
செல்வன்
**அழகேசன் அமிர்தலோஜனன்**
மென்மேலும் சிறப்புப்பெற வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அபிவிருத்திச் சபையினர், பழைய மாணவர்கள்.

(45427)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 12 — 12 — 1942

மறைவு: 22 — 02 — 1996

### திருமதி நடராசா நவமணி

**திதி: 12- 03- 1997**

முன்னும் பின்னும் நினைவாகி — அது
முடிவிற் பெரிய சனவாகி
நீயும் நானும் கதையாகி — நம்
கதையும் உலகிற் செலவாகிக்
காலம் படுகையதன் மேலே — முன்
கழிந்த நினைவுகள் கண்ணயர
அழிந்த நினைவுகள் கண்கலங்க — மனம்
அங்கும் இங்கும் அலைபாயும்.

உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கும்:

கே. எம். நடராசா (கணவன்)
பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிகரை வீதி, சங்கானை.

(9299)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 — 03 — 1927

மறைவு: 05 — 03 — 1996

### அமரர் இராசையா கமலேந்திரம்

(கமலம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

**திதி: 22 - 02 - 1997**

அன்பினால் எமை வளர்த்த எங்கள் அப்பா!
உங்கள் முகம் மறைந்து ஆண்டொன்று போயும்
நாங்கள் இன்பமாய் வாழ்ந்த காலத்தை எப்படி
மறப்போம்?
ஈடிணையற்ற பாசம் எங்கினிக் காண்போம்?
நாம் சிறந்து வாழ உழைத்த எம் அப்பா!
எங்களுள்ளம் மகிழ்ந்திட வருவீர்களா?
தெய்வமாய் வாழும் அப்பா...... எமை
என்றுமே காப்பீர்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(45409)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 17 — 04 — 1943

இறைவன் அடியில்: 22 — 02 — 1996

### கார்த்திகேசு திருநாவுக்கரசு

(கிளை முகாமையாளர், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்)

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளராகவும், கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க கிளையின் ஆயுட்கால தலைவராகவும், யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் கடமையாற்றி அமரத்துவம் அடைந்த திருநாவுக்கரசு அவர்களை நண்பர்கள் நாம் நினைவு கூருகின்றோம்.

#### நினைவலைகள்

சித்திரமேழி எனும் சிற்றூர் செய்தவம் தானதனில்
புத்திரனாய் அவதரித்தான் 'திரு' அவ்வூர் புத்துயிர்
பெற்றிடவே.
பத்திரமாய் கற்றகலை கூட்டுறவு பகிர்ந்தளித்தான்
- கொள்கை பல பணிபாளர்கட்கு.
எத்தனை புத்திகள் கேட்பதற்கு காத்திருந்தோம்
**'கா' 'திரு' வை நண்பர்கள் நாம்.**

திரு அண்ணா திரு அண்ணா என தினந்தோறும்
நாம் அழைப்போம்
அழைத்த எம்மை எல்லாம் நீர் ஆதரித்த நாள்கள் பல.
அந்த நாள்கள் பலவற்றை நன்றியுடன்
நாம் நினைக்கின்றோம்
நினைக்கின்ற போதெல்லாம் நிழலாடும் உன் உருவம்.
உன் உருவம் கண்டாலே நாம் எல்லாம்
உரம் பெறுவோம்.
உரம் பெற்ற நாமெல்லாம் உருக்குலைந்து
நிற்கின்றோம் ஓராண்டாய்.
ஓராண்டாய் விட்டதையா உன் உருக்கண்டு நாம் நம்
- புறக்கண்ணால்.
புறக்கண்ணால் காணாதபோதினிலும் நிதமும்
நிழலாடுதையா உன் - உருவம் எம் அகக்கண்ணில்.
எம் அகத்தின் கண் என்றென்றும் நீங்காது நிலைத்து
நிற்கும் - உன் நினைவு.

குறுகுறுத்த பார்வை குழிவிழுந்த கன்னம்
விறுவிறுத்த பேச்சு விழியுயர்ந்த கண்கள்
பரந்துபட்ட நெற்றி அதுவே உனது வெற்றி
விழிமூடி நின்றாலும் நிழலாடும் உன் நினைவு:
பயம் என்ற சொல்லைத் தன் பத்திரத்தில்
நீக்கிவிட்டாய்
புயல் என்ற சிங்கம் போல் கூட்டுறவில் களம் பல
ஆடிவந்தாய்
கூட்டுறவுத் துறைக்கோர் கூட்டுறவாளனாய்
வாழ்ந்து காட்டினாய்
பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச்
சங்கமதில்.

பிரிவால் வாடும்:
**நண்பர்கள்.**

(45397)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றமடைந்த பாடத்திட்டங்களின் விவரத்தை பெற்றுத்தருமாறு ஆசிரியர் சங்கம் கோரிக்கை

## இன்னும் அவை யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், பெப். 22

பல்வேறு பாடங்களுக்கும், வகுப்புகளுக்குமான புதிய பாடத்திட்டங்கள் கல்வி அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்டன. ஆனால் நீண்ட காலமாகியும் அவை யாழ். மாவட்ட பாடசாலைகளுக்குக் கிடைக்கவில்லை. எனவே மாணவரின் நலன் கருதி அந்த விவரங்கள் பெறப்பட்டு உடன் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கிறது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

அண்மையில் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் யாழ். கல்விப் பணிப்பாளர்களைச் சந்தித்து பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர் நோக்குகின்ற பல பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர்.

அந்தக் கலந்துரையாடலின் போது மேற்கண்ட கோரிக்கையும் விடுக்கப்பட்டது.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் அங்கு முன்வைத்த ஏனைய கோரிக்கைகள் வருமாறு:-

★ இராணுவ நடவடிக்கையினால் யாழ். மாவட்டத்தில் இருந்து ஏனைய மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளவர்களான அதிபர்கள், ஆசிரியர்களின் புதிய சம்பள விபரத்தினை அவர்கள் இடம் பெயர்ந்துள்ள மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

★ இடம் பெயர்ந்துள்ள பயிலுநர் ஆசிரியர்களின் இறுதிப்பரீட்சை முடிவுகள் அவர்களுக்குக் கிடைக்க ஆவன செய்தல் வேண்டும். இதேபோல் இடம் பெயர்ந்துள்ள மாணவர்களின் சகல பொதுப்பரீட்சைகளின் முடிவுகளும் அவர்களுக்குக்கிடைக்க ஆவனசெய்யப்பட வேண்டும்.

★ இளைப்பாறியுள்ள அதிபர்களின் ஒய்வூதியம் எவ்வித தடங்கலுமின்றி விரைவாகக் கிடைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

★ தோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களின் சேவைக் காலத்தை ஓய்வூதிய சேவைக்காலத்தில் சேர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

★ 01-01-95 இல் இருந்து அதிபர்களுக்குக் கிடைக்க வேண்டிய இடைக்காலச் சம்பளத்தின் பாக்கியை அவர்கள் விரைவாகப்பெற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

★ பாடசாலை மாணவர்களின் சகல பொதுப் பரீட்சை முடிவுகளைத் தனியார் கல்வி நிறுவனங்கள் உரிமை கோருவதைத் தடுக்க ஆவன செய்தல் வேண்டும்.

★ பரீட்சைத் திணைக்களத்தினரால் நடத்தப்படும் சகல பொதுப் பரீட்சைகளின் போதும் பரீட்சை ஆளணியினரை நியமிக்கும்போது தகுதியானவர்களுக்கு சுழற்சி முறையில் வாய்ப்புக் கிடைக்க ஆவன செய்தல் வேண்டும்.

★ பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் ஏற்படும்போது அது விளம்பரப்படுத்தப்பட்டு, விருப்புடையோர் விண்ணப்பிக்க வாய்ப்பளித்துத் தகுதியானவரை நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

★ தீவுப் பகுதியில் இருந்து நகரப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதில் ஒரு நிரந்தரக் கொள்கையைக் கடைப்பிடித்தல் வேண்டும். தீவுப் பகுதியிலும் ஆசிரிய வளம் குறையாமல் இருக்கக்கூடிய வகையில் இடமாற்றங்கள் அமைதல் வேண்டும். 31-12-96 இல் தீவுப் பகுதிகளில் மூன்று வருட சேவையை முடித்த ஆசிரியர்களுக்கு அவர்கள் கோரும் பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்படல் வேண்டும்.

★ இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வேறு மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து மீண்டும் யாழ். மாவட்டத்திற்கு வந்து கடமைகளை ஏற்றுக் கொண்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்கு ஆபத்துக் காலக் கொடுப்பனவு உடனடியாக வழங்கப்படல் வேண்டும்.

★ ஆசிரிய ஆளணியினர் சகல பாடசாலைகளுக்கும் சமாந்தரமாகக் கிடைக்கத் தக்கதாக இடமாற்றக் கொள்கை வகுக்கப்பட்டு, ஆசிரிய இடமாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். எவ்வித அடிப்படையில் இடமாற்றங்கள் செய்யப்படும் என்பதைச் சகல தரப்பினர்களுக்கும் தெரியப்படுத்துதல் வேண்டும்.

★ கோட்ட, வலய மட்டங்களில் ஆசிரிய இடமாற்ற சபைகள் அமைக்கப்பட்டு ஆசிரிய தொழிற் சங்கப்பிரதிநிதிகளையும் உள்ளடக்கி இடமாற்றசபை கூட்டப்பட்டு ஆசிரிய இடமாற்றங்களைச் செய்தல் வேண்டும். (ஐ)

## மின்சார வசதி இருந்தும் தண்ணீர் இல்லை

யாழ்ப்பாணம், பெப். 22

24 மணி நேரமும் மின்சார வசதி இருந்தபோதிலும், வார்ட்டில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள் பாவனைக்குத் தண்ணீர் இன்றி அவதிப்படுகின்றனர்.

யாழ். போதனா வைத்திய சாலையிலேயே இந்நிலை நீடிக்கிறது.

வார்டுகளுக்குக் காலையிலும் மாலையிலும் இரு தடவைகள் மாத்திரம் தண்ணீர் விநியோகம் நடைபெறுவதாகவும் —

அதுவும் ஒரு தடவையில் சுமார் 30 நிமிட நேரம் மாத்திரமே தண்ணீரை உபயோகிக்கக் கூடியதாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## தென்மராட்சி ஒய்வூதியர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 22

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ-4)

## நிர்வாகசபை கூட்டம்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு அமையத் தலைவரின் மல்லாகத்தில் உள்ள இல்லத்தில் நடைபெறும். (ஐ-4)

## ஆசிரியர்களை சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

தோட்டப் பாடசாலைகளில் ஆற்றியசேவை ஒய்வூதிய கால சேவையில் இதுவரை சேர்க்கப்படாததால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட அதிபர்கள், ஆசிரியர்களுடனான சந்திப்பு எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வலயம்—1 பணிமனையில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட சகலரையும் அதில் கலந்து கொள்ளுமாறு தமிழர் ஆசிரியர் சங்க துணைப் பொதுச்செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் கேட்டுள்ளார். (ஐ)

## நாவல் அறிமுக விழா

சண்டிலிப்பாய், பெப். 22

மங்கள நாயகம் தம்பையாவின் 'நெருங்குண்ட இதயம்' என்னும் நாவல் அறிமுக விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

பல்கலைக் கழக தமிழ் மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் இவ்விழாவுக்கு மன்றத் தலைவர் திரு. இ. கிருஸ்ணகுமார் தலைமை வகிப்பார்.

நூல் அறிமுக உரையை பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் நிகழ்த்துவார்.

வாழ்த்துரையை பேராசிரியர் அ. சண்முகதாஸும், ஆய்வுரையை பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியனும் வழங்குவர். (ஐ-135)

## சமூக வாழ்வுக்கு உகந்த பூரண மனிதனை உருவாக்க மாணவருக்குச் சாரணியம் அவசியம்

சாரணிய இயக்கத்தை தோற்றுவித்த பேடன் பவல் பிரபுவின் 140 ஆவது பிறந்த தினம் இன்று 22 - 2 - 1997 ஆம் திகதியாகும். மாணவர்களுக்கு சாரணியத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறது இக்கட்டுரை.

பேடன் பவல் அவர்கள் ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' எனும் ஆன்றோரின் கூற்றுக்கிணங்க வாழ்ந்தவர். பொறுப்புள்ள நற் பிரஜைகளை நாட்டிற்கு ஆக்கியளிப்பதனூடாக சீரிய நோக்கங்களை அடைவதற்காக சாரணிய இயக்க அமைப்பு முறைகளை உருவாக்கினார்.

இளஞ் சிறார்களுக்கு, சமூக வாழ்வில் வெற்றிக்கு ஏட்டுக்கல்வி மாத்திரம் பூரண தகுதியை அளிக்காது என்ற உண்மையை அனுபவ ரீதியாகக்கண்டு இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் சாரணிய பயிற்சித் திட்டங்களை வகுத்தவர்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கீழ்ப்படிவு ஆகிய நற்பண்புகளுடன் இணைந்த சமூக, பொருளாதார, கலாசார முறையை விளங்கிக் கொள்ளக்கூடிய வகையிலும், மாணவர்களுடைய அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்யும் வகையிலும் செயற்திட்டங்கள் அமைந்துள்ளன.

மேலும் தேசிய பாரம்பரியங்களைப் பின்பற்றி தன்னூக்கம், துணிவு, தனக்கென வாழாமல் பிறர்க்கெனவும் வாழும் சுயநலமற்ற சேவையினை எக்காலத்திலும் எவருக்கும் உதவி புரியும் நல்ல இயல்புகளையும் சாரணியம் வளர்க்கிறது. உடலியல், உளவியல், சமூகவியல் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகவும், மனம், வாக்கு, காயம் ஆகியவற்றில் பிறழாது வாழும் வாழ்க்கையினை மேற்கொண்டொழுக ஆற்றுப் படுத்தும் இயக்கமாகவும் சாரணிய இயக்கம் அமைகிறது. எனவே ஒரு நாட்டின் சமூக வளர்ச்சியில் சாரணியத்தின் பங்கு இன்றியமையாததாகும்.

இந்த இயக்கத்தின் பயிற்சிகளின் பயனாக மாணவர்களிடம் நுண்ணாய்வுத்திறன், அபிவிருத்தித்திறன், தொடர்புகொள்திறன், செயல்முறைத்திறன், பிழைத்துவாழ்திறன், பேணுகைத்திறன் போன்ற வாழ்க்கைத்திறன்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. சாரணிய இயக்கப் பயிற்சிகளால் அளிக்கப்படும் பயன்களைப் பூரணமாக அடையவேண்டுமாயின் சாரணன் இப்பணியினைச் சிறப்பாகச் செய்வதற்குத்தன்னை ஆயத்தம்செய்து கொள்ளுதல் மிகவும் அவசியமாகும். அவனிடம் சீரிய நோக்கங்கள் [illegible] அவசியம்.

இன்று சில பெற்றோர்கள் சாரணியம் தம்சிறார்களின் கல்விக்கு இடையூறாக அமையலாம் என எண்ணுவதைக் காண்கின்றோம்.

சாரணியப் பயிற்சிகளில் அதிகமானவை சிறார்களின் கல்வி சம்பந்தமானவையாகவும், சில வாழ்வுடன் தொடர்புடையவையாகவும் அமைகின்றன.

பெற்றோர்கள் சாரணியம் தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு இடையூறாக அமைகின்றதென்ற தப்பான அபிப்பிராயத்தை நீக்கவேண்டும். தமது சிறார்களின் எதிர்கால நல் வாழ்வைக்கருத்திற் கொண்டு, திட்டமிட்ட சாரணர் பயிற்சி, கல்விக்குப் புறம்பான தொன்றல்ல என்ற மனப்பாங்கு பெற்றோரிடம் உருவாக வேண்டும்.

எனவே பெற்றோர்களும், பாடசாலை ஆசிரியர்களும், கல்வி நிறுவனங்களும் மாணவர்களின் எதிர்கால நல்வாழ்வைக் கருத்திற்கொண்டு அவர்களிடம் நற்பண்புகளை வளர்த்து வாழ்விற்குத் தேவையான பல்வேறு பயனுள்ள பயிற்சிகளைப் பெறச் செய்ய வேண்டும்.

மாணவர்களை சாரணியத்தின் மூலம் சமூக வாழ்விற்கு உகந்த பூரண மனிதனாக்குதல் எமது ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

-ஜி. செபஸ்தியாம்பிள்ளை

## உதயன்

### கப்பல் கட்டண உயர்வு

கண்ணைப் பொத்திக் கொள்ளையடிப்பதாக தனியார் வர்த்தகர்களை மக்கள் பல சந்தர்ப்பங்களில் கண்டித்தது உண்டு.

அவர்கள் ஒரு படி என்றால் அரசாங்கம் ஆயிரம் படி என்று சொல்லுமளவுக்குக் காங்கேசன் துறை — திருகோணமலை கப்பல் கட்டணம் திடீரென, மின்னாமல் முழங்காமல், இரவோடிரவாக நான்கு மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. இருநூறு ரூபாவாக இருந்த தனிவழிப் பயணக் கட்டணம் 750 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது!

இது பெரும் அநியாயமாகும். கண்ணைப் பொத்தாமல் அடிக்கும் பெரும் பகற்கொள்ளையாகும். இது குறித்து என்ன காரணம் கூறினாலும் நான்கு மடங்கு உயர்வு நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும்.

யாழ்ப்பாணத்துக்கும் வெளி மாவட்டங்களுக்கும் இடையிலான பிரதான போக்குவரத்து மார்க்கம் கப்பல் பிரயாணம் தான். சாதாரண பொதுமக்கள், கீழ் மத்திய தர வகுப்பைச் சேர்ந்தவர்களான அரச பணியாளர்கள், தனியார்துறை ஊழியர்கள் கப்பலில் தான் பயணம் செய்கிறார்கள்.

அவர்கள் ஒரு முறை வெளி மாவட்டம் போய்த் திரும்புவதற்குக் கப்பற் கட்டணம் மட்டும் 1500 ரூபா செலவிடுவது என்றால் கட்டுப்படியாகுமா? இதனை அரச அதிகாரிகள் சிறிதும் கவனத்தில் எடுத்ததாக இல்லை.

யாழ்ப்பாணத்தின் சாதாரண பிரஜையின் வருமானமும், பொருளாதாரமும் இப்போது அடிமட்டத்தில் உள்ளது. இதனை உணராமல் பிரதான போக்குவரத்துக் கட்டணத்தை மலைச் சிகரத்தின் அளவுக்கு உயர்த்தி இருப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.

யாழ்ப்பாண மக்களுக்கு உரிய ஒரேயொரு போக்குவரத்து வசதி கப்பல் பயணம் தான். ஆகையால் எவ்வளவு உயர்த்தினாலும் அவர்கள் பயணம் செய்தே ஆக வேண்டும். இதில்இயன்றளவுக்குச் சூறையாடுவோம். தட்டிக் கேட்க யார் இருக்கிறார்கள்? வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் பேசுவார்கள், பேசி விட்டுப் போகட்டுமே — என்ற அதிகாரத் தனத்துடன்தான் இந்தக் கட்டண உயர்வு முடிவு மேற் கொள்ளப்பட்டதாகக் குடாநாட்டு மக்கள் கருதுகிறார்கள். அரச அதிகாரிகளின் போக்கில் மட்டுமன்றி, அரசாங்கத்தின் — ஆட்சியாளரின் — கண்டும் காணாத தன்மையிலும் மக்கள் அதிருப்தி கொண்டுள்ளார்கள்.

தமிழ் மக்களின் வாழ்க்கை எல்லா முனைகளிலும் நலிந்தும் ஒடிந்தும் போயுள்ளது. அது தெரிந்தும், மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல, அவர்கள் மீது மேலும் சுமைகளை ஏற்றுவது எந்த விதத்திலேனும் தவிர்க்கப்பட வேண்டும்.

இத்தகைய செயல்கள் சுற்றிச் சுற்றி வந்து ஒரு புள்ளி நிலையத்துக்கே இட்டுச்செல்கின்றன. தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற கோட்பாட்டை அரசும் அதிகாரிகளும் இறுகப் பற்றிக் கொண்டிருக்கின்றார்கள்; அதனை ஓர் அங்குலமும் நெகிழ்த்திட மாட்டார்கள் என்ற உணர்வையே தமிழர் நெஞ்சங்களில் இரும்பாய்க் காய்ச்சி உறைய வைக்கின்றது.

### நாளை

மாசி 12

ஞாயிற்றுக்கிழமை

திதி: பிரதமை மாலை 6-39 வரை.

நட்சத்திரம்: பூரம் பின் இரவு 1-35 வரை.

ராகுகாலம்: 5.01 6-.31

சுபநேரம்: 9.31 - 11-01

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானம் மேல் எழுந்தபோது திடீரெனச் சத்தம் கேட்டது

## உயிர் தப்பிய சிப்பாய் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22

விமானம் மேல் எழுவதற்காக வேகத்தை அதிகரித்தபோது சத்தம் ஒன்று கேட்டது.'

விபத்துக்குள்ளான விமானத்தில் பயணம் செய்து காயமுற்று தற்போது கொழும்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள படையினரில் ஒருவரானஎம். டி. பிரேமரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

நான் பலாலி செல்வதற்காக இந்த விமானத்தில் பிரயாணத்தை ஆரம்பித்தேன்.

இந்த விமானம் விமான ஓடுபாதையில் காலி வீதிப் பக்கம் வரை ஊர்ந்து சென்று அங்கிருந்து மேலெழுவதற்காக வேகத்தை அதிகரித்தது.

அப்போது விமானத்தில் சத்தம் ஒன்று கேட்டது.

விமானத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டுள்ளது என்பதை உணர்ந்துகொண்டோம்.

விமானத்தின் வேகத்தை விமானிகளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

விமானம் குப்புற சேற்று நிலத்தில் விழுந்து உடைந்தது. நாங்கள் நான்கு ஐந்து பேர் வெளியில் பாய்ந்தோம். சேற்று நிலமானபடியால் எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. விமானத்துக்குள் இருந்த ஏனையோரை வெளியே எடுக்க நாங்கள் முயன்றோம். இருப்பினும் எங்களால் முடியவில்லை.

அதன் பின்னர் விமானப் படையினர் அந்த இடத்துக்கு வந்து கதவைத் திறந்து காயமடைந்தவர்களை வெளியே எடுத்தனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-10)

## தொலைக் கல்வி பாடநெறி இறுதிப்பரீட்சை

ஆசிரியர் தொலைக்கல்வி பாடநெறி இறுதிப் பரீட்சை இன்று 22ஆம் 23ஆம் திகதிகளிலும்மார்ச் 1ஆம் 2ஆம்திகதிகளிலும்நடைபெறஉள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகளை சிரேஷ்ட விரிவுரையாளர்களிடமிருந்து சேகரித்துக் கொள்ளுமாறு பரீட்சார்த்திகள் கோரப்படுகின்றனர். (இ)

## பாராட்டு விழா

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக (பனை, தென்னை வளம்) பதவி உயர்வு பெற்ற காசிநாதன் பரநிருபசிங்கம் அவர்களின் பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நீர்வேலி பிராந்திய சபை மண்டபத்தில் பிராந்திய சபைத் தலைவர் திருமதி ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறும். (இ)

# பாவிக்க முடியாத அளவுக்கு விமானம் முற்றாகச் சேதம்

கொழும்பு, பெப். 22

விபத்துக்குள்ளான அன்ரனோவ் விமானத்தின் முன்பகுதி உடைந்ததால் இந்த விமானம் இனிப்பாவிக்க முடியாத அளவுக்கு முற்றாகச் சேதமடைந்துள்ளது.

விமானத்தில் இருந்த மரக்கறிவகைகள், மீன் டின்கள் மற்றும் பொருள்கள் எங்கும் சிதறிக்கிடந்ததாககொழும்பு செய்திகள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் படையினருக்கான சம்பளப்பணமும் இந்த விமானத்தில் எடுத்து வரப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (இ-3)

### எடிபல...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் இடம்பெற்றது.

படையினர் தள்ளாடி இராணுவ முகாமுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிப்பதாக செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது.

அதே சமயம் 'எடிபல' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் வன்னியில் 50 கிலோ மீற்றர் வரை முன்னேறியுள்ளார்கள் என்றும் —

புலிகளின் எதிர்ப்பு சிறிதளவே காணப்பட்டது என்றும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமை அலுவலகம் நேற்றுத் தெரிவித்தது. (இ- 4)

### செய்தி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னத்தைப் புகைப்படம் எடுக்கவும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களுக்கும் விமானப்படையினருக்கும் சூடான வாக்குவாதம் இடம்பெற்றது.

விபத்துக்குள்ளான விமானம், ஓடு பாதையின் கிழக்குப் பக்கத்தில் சேற்றில் புதைந்திருந்த காட்சியை மாத்திரம் இரத்மலானை விமான நிலைய நுழை வாயிலில் இருந்து பத்திரிகையாளர்களால் புகைப்படம் எடுக்க முடிந்தது.

விமானம் விழுந்த இடம் மக்கள் அதிகம் செறிந்து வாழும் பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ளது.

இந்த விமானம் இன்னும் சிறிது தள்ளி வீழ்ந்திருந்தால் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டிருக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமானம் ஓடுபாதையில் ஓடி உயரே எழ முயன்றதாகவும் —

ஆனால் வழமைபோல அந்த விமானத்தால் எழ முடியவில்லை எனவும் —

''கட கட'' என்ற சத்தத்தைத் தொடர்ந்து விமானம் சேற்று நிலத்தில் விழுந்தது என்றும் — உள்ளூர் விவசாயி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

## புலிகள் ஆதரவாளர் கைது

சென்னை, பெப். 22

தமிழகத்தில் இருந்து வெளிவரும் 'நெற்றிக் கண்' வார இதழின் ஆசிரியரான ஏ.எஸ், மணி என்பவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்,

விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் 'செலூலர்' தொலைபேசி பெற அவர் உதவினார் என்று அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

அவரது இல்லத்தைச்சோதனையிட்டபோது விடுதலைப் புலிகள் ஆதரவு பிரசார ஆவணங்கள் உட்பட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

### விமானம்....

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

நான்கு விமானிகளில் ரஷ்ய விமானியும்ஒருவர். எனினும் விமானிகள் எவருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை.

காலை 10. 25 மணி அளவில் இந்த விபத்து ஏற்பட்டது.

விமானம்மேல் எழுந்ததும் சத்தம் ஒன்று கேட்டதால் விமானிகள் உடனடியாக விமானத்தைத் தரையிறக்க முயன்றனர். ஆனால் ஓடு பாதையை விட்டு விலகிய விமானம் அருகிலுள்ள சேற்றுப் பகுதியில் வீழ்ந்தது.

இந்த விமானம்ஒருதடவை சென்று வந்து இரண்டாவது தடவை புறப்பட இருந்த சமயமே விபத்துக்குள்ளானது.

விமானத்தில் இருந்த 59 பேரில் நால்வர் படை அதிகாரிகள் என்று தெரிவிக்கப்பட்டது (இ-3-4-10)

### அகதிகள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கையின் போது நடத்தப்பட்ட விமான தாக்குதல் மற்றும் ஷெல் வீச்சுகளுக்கு அஞ்சி, உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் தமிழகம் நோக்கிப் புறப்பட்ட மக்களே இறந்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது,

படகு விபத்தில் சிக்குண்டவர்களில் 20 அகதிகளும் இரண்டு படகு ஊழியர்களும் காப்பாற்றப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

படகு விபத்துச் சம்பவம் குறித்துச் சொல்லப்படுவதாவது:-

ஷெல் வீச்சுக்கும் குண்டு வீச்சுக்கும் அஞ்சிய மக்கள் புதன்கிழமை இரவு மூன்று படகுகளில் நாச்சிக்குடாவில் இருந்து இராமேஸ்வரம் நோக்கிப் புறப்பட்டனர்.

அந்தப் படகுகளில் ஒன்று நாச்சிக்குடாவுக்கும் விடத்தல் தீவுக்கும் இடையில் உள்ள கடற்பரப்பில், புறப்பட்ட ஒரு மணி நேரத்தில் கவிழ்ந்தது.

குறிப்பிட்ட படகில் பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 150 பேர் பயணம் செய்தனர் என்றும் மேலதிக பாரத்தினாலும் காற்றினாலும் படகு மூழ்கியதாக அறியப்படுகிறது.

இரவில் விபத்து நடந்ததனால் மீட்பு வேலைகளை உடனடியாகச் செய்ய முடியவில்லையாம்

கடற்புலிகள் நடத்திய மீட்பு வேலைகளின் போது 22 பேர் உயிர் காப்பாற்றப்பட்டனர். 85சடலங்கள் எடுக்கப்பட்டன. மீட்புவேலைகள் தொடர்ந்து நடைபெற்றதாக ஏ. எப். பி செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

62 பேரின் சடலங்கள் இனங்காணப்பட்டதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது.

நாச்சிக்குடாவில் இருந்து புறப்பட்ட ஏனைய இரண்டு படகுகளும் புதன்கிழமை இரவே இராமேஸ்வரம் சேர்ந்தன என்றும் —

35 குடும்பங்களைச் சேர்ந்த 98 அகதிகள் அந்தப் படகுகளில் அங்கு சேர்ந்தனர் என்றும் — சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

கிளிநொச்சியில் ''சத்ஜய'' இராணுவ நடவடிக்கை நடைபெற்ற வேளையிலும், தமிழ் மக்கள் தமிழ் நாட்டுக்குப் படகுகள் மூலம் (நாச்சிக்குடாவில் இருந்து இராமேஸ்வரத்துக்கு) அகதிகளாகச் சென்றனர்.

அப்போதும் படகு ஒன்று கவிழ்ந்ததில் 108பேர் மரணமானார்கள்.

கடந்த ஓகஸ்ட் மாதத்திலிருந்து சென்ற புதன்கிழமை வரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர். (அ-3-4-10)

## பூவரசம்குளம் தடைமுகாம் மக்கள் போக்குவரத்துக்கு

### எனினும் ஒருசிலரே வந்தனராம்

கொழும்பு, பெப். 22

பூவரசங்குளம் தடைமுகாமும் கடந்த திங்கட்கிழமை பொதுமக்களுக்காகத் திறக்கப்பட்டது என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் ஒருசிலரே பூவரசங்குளம் ஊடாக வவுனியா நகருக்குள் வந்தனர் என்றும் —

மாங்குளம், பறையன்குளம் ஆகிய பகுதிகளில் இருந்தே இவர்கள் வந்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

தாண்டிக்குளம் தடைமுகாம் கடந்த திங்கட்கிழமை திறக்கப்பட்ட பின் 10 ஆயிரம் பேர் வவுனியாவுக்குள் வந்தனர் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மூலம் பளையில் அபிவிருத்தி வேலைகள்

பளைப் பிரதேச செயலகத்தினால் கடந்த வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 11 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

ரூபா ஐந்து லட்சம் செலவில் பளை வைத்தியசாலை புனர்நிர்மாண வேலைகளும் —

ரூபா இரண்டு லட்சம் செலவில் பளை, முகமாலை, புலோப்பளை ஆகிய இடங்களில் குழாய்க்கிணறுகள் அமைக்கும் வேலைகளும் —

ரூபா இரண்டு லட்சத்து 75 ஆயிரம் செலவில் பெரிய பளை வீதி திருத்த வேலைகளும். —

ரூபா ஒரு லட்சம் செலவில் தையல் பயிற்சி நிலைய கட்டட நிர்மாணவேலைகளும்—

ரூபா 50 ஆயிரம் செலவில் பளைப்பிரதேச சபை பொது நூல் நிலையத்துக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்யும் வேலைகளும் — நடைபெற்று வருகின்றன. (இ-117)

## மத்திய மாகாணத்தில் 'மலைநாடு' உருவாக்க அத்திவாரமிடப்படுகிறது

### மகா சங்க இணைப்புக் குழு தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22

'தோட்டத் தொழிலாளர்களுக்கு சிங்கள மக்களின் தாயக மண்ணை வழங்குவதன் மூலம் மத்திய மாகாணத்தில் 'மலைநாடு' ஒன்று உருவாக அத்திவாரம் இடப்படுகிறது'

இவ்வாறு மகா சங்கங்களின் இணைப்புக்குழு தெரிவித்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி வழங்கும் அரசின் திட்டத்தைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடு சுதந்திரம் பெற முன்பு சிங்கள மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டு பின்னர் சிங்களவர்களிடம் வந்த தாயக பூமியை இந்தியத் தோட்டத் தொழிலாளர்களிடம் இன்று கையளிப்பது சிங்கள மக்களுக்கு இழைக்கும் பெரிய அநீதி ஆகும்.

சிங்களத் தாயகத்தில் பிரிட்டிஷ்காரர்கள் அமைத்த தேயிலைத் தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்குக் காணி வழங்கப்பட்டு வருகிறது.

வெறும் சத்தியக்கடுதாசியுடன் காணியைச் சொந்தமாக்கும் செயற்பாடு உலகிலேயே இங்குதான் நடக்கிறது.

ஒவ்வொரு அரசிலும் நிபந்தனை போட்டு அந்த அரசுக்கு ஆதரவு வழங்குபவர் தொண்டமான். பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் இப்படித்தான் அவர் ஆதரவு வழங்குகின்றார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு காணிகளை வழங்குவதன் மூலம் சிங்கள மக்களின் தாயக பூமி இழக்கப்படுவதுடன், தோட்டத் தொழில்துறையும் அழிக்கப்பட்டு வருகிறது—இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆவணங்களை சமர்ப்பிக்க கோரிக்கை

''போபர்ஸ்'' பீரங்கி ஊழல் தொடர்பான சுவிஸ் வங்கியின் இரகசிய ஆவணங்களை வரவு செலவுத் திட்ட கூட்டத் தொடரின் போது நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் சமர்ப்பிக்க வேண்டும். இந்தப் பேரத்தில் இலஞ்சம் பெற்ற குற்றவாளிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### பலாலி நோக்கிப....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யர்கள் தீவிரமாக முயன்று வருகிறார்கள். அமைச்சர் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து காயமுற்றவர்களையும் பார்வையிட்டார்.

இந்த விபத்துப் பற்றி விரிவான விசாரணை நடத்தப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார். (இ-3-4-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 23இ2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22 - 02 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org